**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093627

1. District : மாவட்டம். திண்டுக்கல்
   PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு
   Year: ஆண்டு 2020
   FIR No.: மு.த.அ. எண் 04/20
   Date: நாள் 06.11.2020
2. (i) Act சட்டம்: CrPC — Sections பிரிவுகள்: 41, 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: as amended by the PC Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 5.11.20 — Date to : நாள் வரை 6.11.20
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் 1630 hrs — Time to : நேரம் வரை 01.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.11.20 — Time : நேரம் 04.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் 04.00 hrs
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — இரகசிய தகவலின் பேரில்
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 33 கி.மீ தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி — சார்பதிவாளர் அலுவலகம், நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — J. நாகராஜன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — S. ஜெயராம்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 1972
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — துணை காவல் கண்காணிப்பாளர்
   (g) Address : முகவரி — ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திண்டுக்கல்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. ம. சுரேந்திரகுமார், முதுநிலை உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), நிலக்கோட்டை
   2) திரு. மா. [illegible] வயது 29/20, S/o. மாரியப்பன், [illegible].புதுப்பட்டி, நிலக்கோட்டை (தனிநபர்)
   3) திரு. அ. சந்தன கருப்பையா, உதவியாளர், 4) திருமதி. ஜெயக்கொடி, இளநிலை உதவியாளர் 5) திருமதி. ப. [illegible], அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

05.11.2020 ஆம் தேதியன்று திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஒருங்கிணைந்த தாலுகா அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் நிலக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவிற்காக வருபவர்களிடம், பத்திர பதிவு எழுத்தர்கள் மூலம் அலுவலகத்தில் வைத்தும், புரோக்கர் மூலம் அலுவலகத்திற்கு வெளியில் வைத்தும், நிலக்கோட்டை பத்திரப்பதிவு அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு பதிவுகளை மேற்கொள்வதாக கிடைத்த ரகசிய தகவலை அடுத்து 05.11.2020ம் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு நிலக்கோட்டை பத்திரப்பதிவு அலுவலகம் சென்றபோது சார்பதிவாளர் பொறுப்பில் இருக்கும் முதுநிலை உதவியாளர் திரு.சுரேஷ்குமார் தான் அலுவலகத்திற்கு வந்து செல்லும் டாடா இண்டிகா எண் TN 59 BC 4516 மூலம் கிளம்பி நிலக்கோட்டை To மதுரை ரோட்டில் நிலக்கோட்டையில் இருந்து கிழக்கே சுமார் 1½ கி.மீ தூரத்திற்கு சென்று கொங்கர்குளம் அருகே கருப்புசாமிகோவில் எதிர்பக்கம் மெயின்ரோட்டில் இடதுபுறம் ஓரம் நிறுத்தியிருந்தார். அப்போது பின்தொடர்ந்து வந்த இரண்டு இருசக்கர வாகனங்கள் Yamaha Fascino TN 57 BU 9898 மற்றும் Pulsar TN 57 AS 6237 ஆகியவை வந்து அவரது காரின் அருகில் நின்றது. அதிலிருந்து இறங்கிய இரண்டு நபர்கள் காருக்குள் சென்று

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 6/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.11.2020 - 08.00hrs

Name: பெயர் J. Nagarajan.
Rank: நிலை Deputy Supdt of Police, No. எண் ........
V&AC, Dindigul

* GCP-240-34(Type 2) 90,000 Cps -21 3 16(HCL-12)p.2

பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அரசு பொலிரோ வாகனம் TN 07 G 2503ல் நான் மற்றும் மதுரை ஆய்வுக்குழு அலுவலர் திரு.மு.தாஜுதீன் மற்றும் குழுவினர் பின் தொடர்ந்து கார் அருகே சென்று அவர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டோம். அப்போது காரின் பின்பக்க சீட்டில் இடது பக்கம் அமர்ந்திருந்த சிகப்பு சட்டை அணிந்திருந்த நபர் தன்னிடம் இருந்த பணம் மற்றும் துண்டு சீட்டு ஒன்றை தூக்கி காருக்கு வெளியே வீசினார். அந்த பணத்தை ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் எடுத்து எண்ணி பார்க்க அதில் ரூ.8950/- (500x16, 200x4, 100x1, 50x1) இருந்தது. அத்துடன் காணப்பட்ட ஒரு துண்டு சீட்டில் M.Murugapandi - 5000 - 1000 Reporters - 4000, ஸ்ரீதர் - 500 MOD, முத்துராஜ் - 1000, அறிவு - 2000 என்று எழுதப்பட்டிருந்தது. அப்போது காரில் இருந்த நபர்களை விசாரிக்க ஓட்டுநர் இருக்கையில் சார்பதிவாளர் திரு.ம.சுரேஷ்குமார் அவர்களும், அவருக்கு இடது பக்கம் முன் இருக்கையில் மதுரையைச் சேர்ந்த கணிணி சர்வீஸ் என்ஜினியர் திரு.சு.ஆசைத்தம்பி, த/பெ.சுப்பிரமணி, 16/8, அமைச்சியர் கோவில் தெரு, வில்லாபுரம், மதுரை-12 என்பவரும், பின் இருக்கையின் வலது பக்கம் திரு.பொ.அசோகன், வயது.43/2020, த/பெ.பொம்மையா, 3/81, வடக்கு தெரு, இ.கொங்கபட்டி, நிலக்கோட்டை என்பவரும், பின் இருக்கையின் இடது பக்கம் திரு.மா.விஜயபிரபு, வயது.29/2020, த/பெ.மாரியப்பன், என்.புதுப்பட்டி, நிலக்கோட்டை என்பவரும் அமர்ந்திருந்தனர். அப்போது இடது பக்கம் அமர்ந்திருந்து பணத்தை வீசி எறிந்த திரு.மா.விஜயபிரபு அவர்களிடம் மேற்படி கைப்பற்ற பணம் ரூ.8,950/- பற்றி கேட்க அந்த பணம் பத்திரம் பதிந்த பத்திர எழுத்தர்களிடம் இருந்து வசூல் செய்யப்பட்டது என்றும், அத்துடன் சார்பதிவாளர் கையெழுத்திடாமல் விட்டு வந்த ஆவணங்களையும் தான் கொண்டுவந்து தற்போது அவரிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டதாகவும், அதனை மீண்டும் அலுவலகத்திற்கு கொண்டு செல்லவேண்டும் என்றும் தெரிவித்தார். பின்னர் காரில் இருந்த திரு.அசோகன் என்பவரை விசாரிக்க தான் சார்பதிவாளர் அவர்கள் தன்னை நிலக்கோட்டை மதுரை சாலையில் அவுட்டரில் வந்து சந்திக்கும்படி சொன்னதாகவும், அதன்படி தான் சந்திக்க வந்ததாக தெரிவித்தார். காரின் இடது பக்க முன் சீட்டில் இருந்த திரு.ஆசைத்தம்பி என்பவரை விசாரிக்க தான் கணிணி சர்வீஸ் பண்ண நிலக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், வேலை முடித்து தானும் சார்பதிவாளர் திரு.ம.சுரேஷ்குமார் அவர்களுடன் மதுரை செல்ல உடன் சென்றதாகவும் தெரிவித்தார். அதன்பிறகு மேற்படி காரை சோதனை செய்ய

காரின் ஓட்டுநர் சீட்டிற்கு கீழே ரூ.30,500/- (500x59, 200x5) இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதுபற்றி ஆஜரில் இருந்த சார்பதிவாளர் உட்பட நபர்களிடம் கேட்க, யாரும் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. எனவே அந்த பணம் சந்தேகத்திற்கிடமான கையூட்டு வசூல் பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்தும் பத்திர பதிவு சம்மந்தமாக கையூட்டு பணம் கைமாறியிருக்கலாம் என்ற தகவலையடுத்து மேற்படி சார்பதிவாளருடன் திரு.அசோகன், திரு.விஜயபிரபு, திரு.ஆசைத்தம்பி ஆகியோரை டாடா இன்டிகா வாகனத்தில் செல்ல நான் மற்றும் ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் குழுவினருடன் அரசு வாகனத்தில் பின் தொடர்ந்து நிலக்கோட்டை பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு மீண்டும் சுமார் 17.00 மணிக்கு சென்றோம். அப்போது அந்த அலுவலகம் திறந்த நிலையில் இருந்தது. அதை சார்பதிவாளர் மற்றும் அலுவலர்கள் முன்னிலையில் அலுவலகத்தை சோதனையிட அந்த அலுவலகத்தில் நுழைந்தவுடன் வலது பக்கம் வடக்கு பார்த்து சார்பதிவாளர் மேடை இருக்கையும், அதற்கு நேர் எதிரே தெற்கு பார்த்து ஆவணங்கள் பதியும் கண்ணாடி பிரேம் போட்டு உள்ள அந்த அறையின் மையத்தில் இருந்த HP Laser jet MRP M 436 dn என்ற பிரிண்டிங் மெசினின் அடிப்பக்க டோரில் வைத்த நிலையில் ரூ.4,000/- (500x7, 100x4, 20x1, 10x8) இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு எதிர்பக்கம் இருந்த மற்றொரு பிரிண்டிங் மிசினுக்கு அடியில் மரரேக்கிள் ரூ1,400/- (500x2, 100x4) கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அந்த அறையின் கிழக்கு பக்கம் உள்ள ஆவண அறை முழுவதும் இரும்பு, மர அலமாரி மற்றும் சிமெண்ட் சிலாப்புகளில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையின் தென்மேற்கு மூளையில் இருந்த சிமெண்ட் சிலாப்பின் முதல் பகுதியின் இரண்டாவது அடுக்கில் இருந்த ஆவணங்களுக்கிடையே ரூ.13,000/- (500x23, 200x4, 100x7) இருந்தது கைப்பற்றப்பட்டது. மேற்படி சிலாப்பில் இரண்டாவது பகுதியின் கீழ் அடுக்கை சோதனையிட அதிலிருந்த ஆவணங்களுக்கிடையே இருந்து ரூ.2,500/- (500x5) கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த அலுவலகத்தில் சோதனையின் போது ஆவண எழுத்தர்கள் 1). சின்னையா, வயது.48/2020, த/பெ.பெரியகருப்பன், 6வது வார்டு, நிலக்கோட்டை, 2)திருமதி.P.பூரணசந்திரா, வயது 41/2020, க/பெ.நாராயணசாமி, லோக்கல்பண்ட் தெரு, நிலக்கோட்டை 3)திருமதி.P.தங்கமணி, வயது 30/2020, க/பெ.பாக்கியராஜ், மணியகாரன்பட்டி, நிலக்கோட்டை ஆகியோர் இருந்தார்கள். அவர்களை விசாரிக்க தாங்கள் பதிவுக்காக வந்ததாகவும் சொன்னார்கள். அவர்களுடன் பொதுமக்கள் திருமதி.C.லெட்சுமிபிரபா, வயது.44/2020. க/பெ.ராஜன், புதுத்தெரு, நிலக்கோட்டை மற்றும் திருமதி.T.சுசீலா, வயது 44/2020, க/பெ.சண்முகமணி,

புதுத்தெரு, நிலக்கோட்டை ஆகியோரும் இருந்தார்கள். அவர்களை விசாரிக்க தாங்கள் நில விற்பனை பதிவு சம்மந்தமாக பத்திர எழுத்தர் திரு.சின்னையா என்பவரை பார்க்க வந்ததாகவும், அவர் அலுவலகத்திற்குள் இருப்பதாகவும் தெரிவித்தார்கள். பின்னர் அலுவலகத்தில் உள்ள ஆவணங்கள் பற்றி அங்கிருந்த அலுவலர்களிடம் விசாரிக்க அனைத்து ஆவணங்களும் ஆன்லைன் பதிவுகளாக பராமரிக்கப்படுவதால் தனியாக பதிவேடுகளாக எதுவும் பராமரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், மேலும் வருகை பதிவேட்டுடன் இணைத்து பராமரிக்கப்படும் தனிநபர் கையிருப்பு பதிவேடு 2020ஐ பார்வையிட இன்றைய தினம் 05.11.2020ல் திரு.சந்தனகருப்பையா ரூ.1,300/-ம், திருமதி.மகாலெட்சுமி ரூ.500/-ம், திரு.அர்ஜுனன் ரூ.490/-ம், திரு.மகேஸ்வரி ரூ.500/-, திருமதி.ஜெயக்கொடி ரூ.300/-ம் அவர்கள் வசம் வைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. சார்பதிவாளர் கையிருப்பு பற்றி குறிப்பிடப்படவில்லை. இந்த அலுவலகத்தை பொறுத்தவரை பத்திர பதிவு கட்டணம் உட்பட அனைத்து வகையான பதிவுகளுக்கும் இணைய வழி மூலமாகவே கட்டணம் செலுத்தப்படுவதால் நேரடியாக பணம் ஏதும் பெறப்படுவதில்லை. மேலும் மேற்படி அலுவலகத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.20,900/- பற்றி கேட்க அதற்கு சார்பதிவாளர் உட்பட ஆஜரில் இருந்த அலுவலர்கள் யாரும் தகுந்த முகாந்திரம் ஏதும் தெரிவிக்கவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.20,900/-ஆனது பத்திர பதிவு சம்மந்தமாக பெறப்பட்ட கையூட்டு பணமாக கருதி சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் கைப்பற்றப்பட்டது. அத்துடன் ஏற்கனவே நிலக்கோட்டை - மதுரை ரோட்டில் வைத்து சார்பதிவாளர் திரு.சுரேஷ்குமார் அவர்களின் காரில் இருந்த கைப்பற்றப்பட்ட ரூ.30,500/- மற்றும் காருக்கு வெளியில் வீசப்பட்ட பணம் ரூ.8,950/- ஆக மொத்தம் ரூ.60,350/- ஆனது இந்த வழக்கில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் தவிர வேறு ஆவணங்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை. எனவே மேற்படி கணக்கில் வராத சந்தேகதிற்கிடமான பணமானது பத்திர பதிவு சம்மந்தமாக பெறப்பட்ட கையூட்டு பணமாக கருதி சாட்சிகள் முன்னிலையில் செயல்முறை நடவடிக்கை 05.11.2020ம் தேதி மாலை 16.30 மணி முதல் 06.11.2020ம் தேதி 01.30 மணி வரை தயார் செய்து கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணத்துடன் நிலையம் வந்து மேற்படி (1) நிலக்கோட்டை சார்பதிவாளர் திரு.ம.சுரேஷ்குமார் மற்றும் அவர்களின் வாகனத்தில் உடன் இருந்த (2) நிலக்கோட்டை தாலுகா, L.புதுப்பட்டி, காட்டு காளி கோவில் தெருவில் வசித்து வரும் திரு.மாரியப்பன் அவர்களின் மகன் திரு.விஜய்பிரபு மற்றும் நிலக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அலுவலர்கள் (3) திரு.அ.சந்தன கருப்பையா, உதவியாளர், (4)திருமதி.ஜெயக்கொடி, இளநிலை உதவியாளர் மற்றும்

(5)திருமதி.ப.மகாலெட்சுமி, அலுவலக உதவியாளர் ஆகியோர்கள் மீது திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2020, சட்ட பிரிவுகள் 41, 102 குவிமுச r/w 7(a) ஊழல் தடுப்புச்சட்டம் 1988 உடன் ஊழல் தடுப்பு (திருத்தப்பட்ட)சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல், திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை அறிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.60,350/- ஆகிவற்றை திண்டுக்கல் மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் மறறும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் நகலை சம்மந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

6/11/2020
Deputy Superintendent of Police
Vigilance & Anti Corruption
Dindigul 624 004